# மூன்றாண்டுகளில் ஐயாயிரம் படையினர் பலி!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 20 இதழ் 351
யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-2-1994

## கொழும்பு சஞ்சிகை தகவல்

(கொழும்பு)
கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ஐயாயிரத்திற்கும் அதிகமான படையினரை அரசு இழந்துள்ளதாக கொழும்பி லிருந்து வெளியாகும் சஞ்சிகை யொன்று தெரிவித்தது இதேவேளை சிறிலங்கா பாது காப்பு அமைச்சு வெளியிட (4-ம் பக்கம் பார்க்க)

## குறைந்த அளவு பகுதியே இராணுவ பிரதேசம்

(கொழும்பு)
கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட பாரிய இழப்புக் களுக்கிடையில் இராணுவம் வடக்கில் யாழ் மாவட்டத்தில் காங்கேசன்துறை, தீவுப்பகுதி கள், பலாலியை சுற்றியுள்ள பிரதேசம் ஆகிய பகுதிகள் மட்டுமே தனது கட்டுப் (4-ம் பக்கம் பார்க்க)

## போரினால் நிமிடத்திற்கு 793 ரூபா செலவு!

(கொழும்பு)
கொட்டும் யுத்தம் வருட மொன்றுக்கு இரண்டாயி ரத்து ஐந்நூறு கோடி ரூபாய் களை விழுங்குவதாகவும் அது நாளொன்றுக்கு 655 9 லட் சம் ரூபாவாகவும் மணித்தி (4ம் பக்கம் பார்க்க)

# ★ இனப் பிரச்னைக்கு தீர்வு; அரசு யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசவேண்டும்

## உலக அகதிகள் நிறுவனம் கோரிக்கை

(புதுடில்லி)
இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்னைக்கு நிரந் தரமான ஒரு தீர்வு காணப்படவேண்டுமானால் இலங்கை அரசு யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை களை நடத்தவேண்டும் என்று அமெரிக்காவிலுள்ள உலக அகதிகளுக்கான நிறுவனம் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகவலை இந்திய தொலைக்காட்சி நிறுவனமான தூரதர்ஷன் நேற்றிரவு தெரி வித்தது. உலக அகதிகள் நிறுவனம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கையில் கடந்த பத்து வருடங்களுக்குமேலாக நிலவி வரும் இனப்பிரச்னையை இராணுவ பலத்தினால் ஒரு போதும் தீர்க்கமுடியாது. பேச்சுவார்த்தைகளின் மூல மாகவே இதற்கு ஒரு நிரந் (4ம் பக்கம் பார்க்க)

## கடந்த ஆண்டில் மட்டும் எண்ணாயிரம் படையினர் தப்பியோட்டம்!

(கொழும்பு)
கடந்த ஆண்டில் மட்டும் எண்ணாயிரத்திற்கும் மேற் பட்ட படையினர் இராணு வத்தை விட்டு ஓடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை இவ் ஆண்டில் இராணுவத்துக்கான ஆட் சேர்ப்பு நடவடிக்கைகளை பெரிய அளவில் மேற்கொள் ளப்பட்டும் அவை கைகூட வில்லை என்று கொழும்பு சஞ் சிகை ஒன்று தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள் ளது. (ஸ)

## மட்டு. ஏறாவூரில் கடும் மோதல்

(மட்டு நகர்)
மட்டு. ஏறாவூர் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினருக்கு மிடையில நேற்று முன்தினம் கடும் மோதல்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படு கிறது.
செங்கலடியிலிருந்து வந்த (4-ம் பக்கம் பார்க்க)

## பாரிய தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமாம்

### இராணுவ உளவுத்துறை தகவல்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாரிய தாக்குதல்களை நடத்த திட்ட மிட்டுள்ளதாக இராணுவ உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளதென செய்தி தாஸ் தெரிவித்தது.
இதேவேளையில் இராணு வத்தினரும் வடக்கும் பிர தேசத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தத் திட்டம் வகுத்துவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.
வடபகுதியில் மழைக்காலம் இப்போது முடிவுற்றிருப்ப தால் இந்தத் தாக்குதல் எவ் வேளையிலும் மேற்கொள்ளப் படலாம் எனவும் கூறப்பட் டது.
கிழக்குப் பகுதியில் விடு தலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தும்பொருட்டு அதிக (4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு தீவிரம்!

(மட்டுநகர்)
தேர்தல்கள் நெருங்கி நெருங்க மட்டுநகரில் பாது காப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுவருவ தாக மட்டு இராணுவ தளபதி பிரிகேடியர் ரோகான் குண வர்த்தன தெரிவித்துள்ளார்.
இடைக்கிடையே புலிகளின் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றபோதிலும்தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு வருவதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.
தேர்தல் பாதுகாப்பு கடமை களில் ஈடுபடுவதற்கென பொலிஸாரினதும்இராணுவத் தினரதும் எண்ணிக்கை அதிக ரிக்கப்பட்டுள்ளதுடன் தேர்தல் (2-ம் பக்கம் பார்க்க)

## கனடா ஈழத்தமிழர் மத்தியில் வன்முறைகள் அதிகரிப்பு!

(ரொறன்ரோ)
கனடாவில் உள்ள இலங் கைத் தமிழர்கள் மத்தியில் வன்முறைகள் அதிகரித்துவரு தாகக் கனடாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கனடாவில் உள்ள ஹரா பரோ நகரில், கடந்த சில தினங்களுக்கு முன் தமிழர் ஒருவரின் வீடு மீது பலத்த துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளதாகப் புகார் தெரி விக்கப்படுகிறது.
இத்துப்பாக்கிச் சூட்டை 4 இலங்கைத் தமிழர்களே நடத்தியதாகவும், இவர்களைக் கனடாப் பொலிஸார் தீவிர (4-ம் பக்கம் பார்க்க)

## சூரியகந்த விவகாரம்: சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(கொழும்பு)
சூரியகந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்வதற்கு அவசியம் ஏற் படும் பட்சத்தில் அரசாங்கம் அவர்கள் மீது சட்ட நட வடிக்கை மேற்கொள்ளும்.
ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோ சகர் பிரட்மன் வீரக்கோன் பி. பி. ஸி.க்கு இவ்வாறு தெரி வித்துள்ளார்.
அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,
சூரியகந்த விவகாரத்தை அலட்சியப்படுத்த முடியாது. (4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் தஞ்சம் பெற பலர் சட்டவிரோத முயற்சி

(கொழும்பு)
அமெரிக்காவில் புகலிடம் பெறுவதற்கெனப் போலி ஆவணங்களைக் கொடுத்து விசா பெறுபவர்களைச் சமர்ப்பிப்போருக்கு கொழும்பில் உள்ள அமெரிக் கத் தூதரகம் எச்சரிக்கை செய்துள்ளது.
இவ்வாறு போலி ஆவணம் அமெரிக்க குடிவரவுச் சட்டத் தின் கீழ் எக்காரணம் கொண்டும் அமெரிக்காவில் புகலிடம் பெறுவதற்கு விசா (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

16, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பரணி மருந்தகசாலை, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-3798)

சித்திரம் (ஆண்டு 11) ஆக்கியோன்: "யசோ" எங்கும் கிடைக்கும். கி-755

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதிய "மாணவர்க்கேற்ற மாண்புறு கதைகள்" பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். கி-754

### மீண்டும் ஆரம்பம்

"ராஜு போட்டோ ரெக்னிக்" மீண்டும் திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ளது. கமெரா, பிளாஷ்கன், பைனாகுலர்ஸ், வீடியோ கமரா போன்றவை சிறந்த முறையில் வழமைபோல் திருத்திக் கொடுக்கப்படும். N. S நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-751)

### மணமகள் தேவை

யாழ். இந்து விஷ்வகுலத்தைச் சேர்ந்த பெற்றோர், படித்த பண்புள்ள குடும்பத்தில் தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். 1. பொறியியலாளர் வயது 31 (Civil Engineer - C. E. I London) 2. கணக்காளர் வயது 28 (A. C. M. A). முதல் கடிதத்தில் முழு விபரமும் தரவும். கனடா, இங்கிலாந்து நாடுகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். விளம்பர இலக்கம் 763, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (சி-763)

### வெளிவந்துவிட்டது

உயர்தரம் மாணவர் பௌதீக வரிசையிலுள்ள சடப்பொருளியல் பகுதி I (பொறியியல்) வெளிவந்து விட்டது. S.I. அலகில் புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்டது. கடந்தகால (1993 உட்பட) சுட்டுரை, பல்தேர்வு வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உயிரியல், பௌதீக விஞ்ஞான மாணவர்கள் எளிதில் விளங்கும் வகையில் எழுதப்பட்டது. ஆக்கம்: திரு. க. கருணாகரன் B. Sc. (கி-760)

UNIVERSITY of JAFFNA, SRI LANKA

**Faculty of Medicine**

The clinical appointments of all students of the 13th batch (1990/91 batch), will commence on 14-02-1994.

REGISTRAR

(A-3799)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 'மாணவர்களிடையே புரிந்துணர்வுகள் ஏற்பட ஒன்றுகூடல் அவசியம்'

(யாழ்ப்பாணம்)

மாணவர்களிடையே புரிந்துணர்வை வளர்க்கவும் பரஸ்பரம் கல்விச் செயற்பாடுகளில் முழுமையாகச் செயற்படுவதற்கேற்ற திறமையைப் பெறவும் ஒன்றுகூடல்கள் பெரிதும் உதவும்.

இவ்வாறு தேசிய கல்வி நிறுவன பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறியின் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் மாணவத் தலைவர் திரு. சு. நடராசா தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மாணவர்களின் தன்னம்பிக்கை பண்பு வளரவும் வழி நடாத்தும் திறன் மேலோங்கவும் இதன் வழி ஆசிரிய வாண்மை விருத்தியுறவும் இவ்வகை நிகழ்வுகள் பேருதவியாகவிருக்கும் என்று நிறைவுரையில் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் குறிப்பிட்டார்.

மாணவர்களின் பாட்டு, ஆடல், ஓரங்க நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## அகதி முகாம்களில் மலசல கூடங்கள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாழும் முகாம்களில் ஜேர்மன் உதவித்திட்டத்தின் கீழ் தேசநிர்மாணிகளால் நிரந்தரமான மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள நீதவான் இல்ல முகாமில் 7 மலசல கூடங்களும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆச்சிரமம் முகாம், கன் முகாம், திலீபன் முகாம், கலிலாக்கெட்டுவன் முகாம், சண்முகம் முகாம், விளாத்தியடி முகாம், மல்லம் முகாம் ஆகிய ஏழு முகாம்களுக்கும் தலா 7 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள சீலன் முகாம், ஆனைக்கோட்டை சந்தி முகாம் ஆகியவற்றில் 7 மலசல கூடங்களும், அட்டகிரியாவில் முகாம் ஆகியவற்றில் தலா 5 மலசல கூடங்களும் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. —சி

## இடம் பெயர்ந்தவரின் வீடுவளவுகளில் விறகு சேகரிப்பு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை, பெரியவிளான், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்தவர்களின் வீட்டு வளவுகளில் விறகு சேகரிப்பவர்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

இடம்பெயர்ந்து தூர இடங்களில் தங்கியிருப்பவர்களில் பலர் ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும்பாலும் தங்கள் வீடுகளுக்குச் சென்று வீடுகளைப் பார்வையிட்டு விறகுகளையும் சேகரித்து வருவது வழக்கம். ஆனால் விறகு சேகரித்துக் கொண்டு திரிந்து விற்பவர்கள் வேறு நாட்களில் இப்பகுதி வளவுகளில் பனை, தென்னை ஆகியவற்றின் விறகுகளையும் மற்றும் பூவரசு மரங்களையும் வெட்டிக் கொண்டு சென்றுவிடுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. -72

## சேவைநலம் பாராட்டு விழா

அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள் அவர்களின்

**சேவைநலம் பாராட்டு விழா**

மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினரும், தொண்டர் சபையினரும், பொதுமக்களும் இணைந்து குருக்கள் ஐயா அவர்களை 18-2-94 ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் பாராட்டி கௌரவிக்கத் தீர்மானித்துள்ளனர். இவ்விழா சிறப்பாக நடைபெற பொதுமக்கள் தங்களால் இயன்ற பண உதவியை ஆலய செயலகத்தில் 15-2-94 ம் திகதிக்கு முன்னர் தந்துதவுமாறு அன்பாக கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அளவெட்டி
1-2-94.

இங்ஙனம்
மேற்படி விழாச் சபையினர்
(கி-769)

## இன்று

(அரியாலை)

யாழ். குருநகர் புதுமை மாதா திருவிழாவையொட்டி இன்று புதன்கிழமை இரவு நற்கருணைப் பவனியும், நாளை காலை கூட்டுத் திருப்பலி, திருச்செருப பவனியும் இடம் பெறவுள்ளது. -59

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்தரக்கிளையின் 50 வது ஆண்டு சேவை இன்று 2ம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படும். இதனை முன்னிட்டு இன்று காலை 8-00மணி முதல் 9-30 மணி வரை வங்கி வளாகத்தில் வைபவம் இடம்பெறும்.

## வருடாந்த உற்சவம்

(ஆனைப்பந்தி)

யாழ். புகையிரத நிலைய ஆலடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 29ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இம்மாதம் 7ம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவுபெறும். -101

## கிராம மேம்பாட்டு திட்டம்

(யாழ்ப்பாணம்)

கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுயதொழிலினை ஊக்குவிப்பதற்கான பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊக்குவித்து வருகிறது.

இலங்கையில் தென்மராட்சி இராமாவில் பகுதியில் கோழி வளர்ப்புத் திட்டமும் மீசாலை கிழக்குப் பகுதியில் பழம் பதனிடலும், கொடிகாமம் மந்திகையில் கோழி வளர்ப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலிகாமத்தில் நவக்கிரியில் கைத்தொழில் சிரமக்குழுக்கள் வடமராட்சியில் அல்வாய் வடக்கு கரணவாய் வடக்குப் பகுதிகளில் கோழி வளர்ப்புத் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களால் 30 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரதன் ஓட்டப் போட்டி

(கிளிநொச்சி)

தமிழர் திருநாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் போராளிகள் பங்குபற்றிய நீண்டதூர மரதன் ஓட்டப் போட்டி கிளிநொச்சி நகருடாக இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான போராளிகள் மேற்படி போட்டியில் கலந்து சிறப்பித்தனர். சுமார் 20 மைல் தூரம்வரை இம்மரதன் ஓட்டப்போட்டி இடம்பெற்றது. -83

## அன்பளிப்பு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு மகாவித்தியாலய உதைபந்தாட்ட அணியைச் சேர்ந்த வீரர்களுக்கு வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினரால் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான போட்டியின் போது அணியும் சீருடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. -101

## பீரங்கி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் கடல் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படை பாசறையிலிருந்து நேற்றுக்காலை பீரங்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கியே இந்த பீரங்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேத விபரம் தெரியவில்லை. 72

## கிழக்கு மாகாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்கள், வேலையாளர்கள் தேர்தல் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி-க்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி முத்தையா நாகமுத்து**

(நிகரை வீதி, சங்கானை)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 - 06 - 1902 | 02 - 02 - 1992 |

**திதி: 9-2-94**

ஈராண்டு சென்றாலும் முழுநிலவாய்
எம்மனதில் எந்நாளும் நிறைந்திடுவாய்-அம்மா

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பவர்கள்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

K. M; நடராசா (மகன்)
நிகரை வீதி, சங்கானை.

(கி-767)

